# இராமேஸ்வரம் நகர் மன்றகூட்டம்

## 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம்26 ம் தேதி காலை 11 : 00 மணிக்கு நடைபெற்ற நகர்மன்ற அவசரக் கூட்ட நடவடிக்கை

---

**முன்னிலை: வே. இராமர் BA.BL.,**
**தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர், இராமேஸ்வரம் நகராட்சி**

| பொருள் எண் | பொருள்விபரம் | தீர்மானவிபரம் |
|---|---|---|
| 1 | இராமேஸ்வரம் நகராட்சிக்கு சொந்தமான நம்புநாயகி அம்மன் யோயில் தலைமை நீரேற்றுநிலையம் மற்றும் செம்மடம் நீரேற்று நிலையங்களில் திரவ குளோரின் மூலம் இயங்கும் மிசினரிகள் உள்ளது. மேற்படி மெசினரியினை இயங்கிட திரவ குளோரின் இருப்பு இல்லை. எனவே, இந்நகராட்சி பகுதிகளுக்கு தொடர்ந்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்திடவும், கோவிட் 19 தொற்றுநோய் பரவிவரும் சூழ்நிலையில் மாவட்ட ஆட்சித்தலைவரின் ஆய்வுக்கூட்ட அறிவுரைகளின் படி குடிநீர் விநியோகத்தில் Disinfection வருடாந்திர தேவையான 40,000 லிட்டர் சப்ளை செய்து தேவைக்கேற்ப விநியோகம் செய்து வர ரூ.1,70,000/–க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் பார்வைக்கும், நிர்வாகஅனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. அனுமதிக்கலாம், வருவாய் நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து கொள்ளலாம். | தீர்மானம் எண். 356 அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | **2.** அவசர அவசியம் கருதியும், பொதுமக்களுக்கு தடையின்றி தொடர்ந்து குடிநீர் விநியோகம் செய்து வர வேண்டியதன் அவசியம் கருதியும், காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். | |
| 2 | இராமேஸ்வரம் நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 21 வார்டுகளுக்குட்பட்ட பகுதிகளில் LED தெருமின் விளக்குகள் 83 எண்ணம், சோடியம் ஆவிவிளக்குகள்–230 எண்ணம் MHL விளக்குகள் 50 எண்ணம், CFL விளக்குகள் 1669 எண்ணம், உயர்மின் கோபுர விளக்குகள் 22 எண்ணம் மற்றும் தெருமின் விளக்கு தானியங்கி சுவிட்கள் 136 எண்ணம் ஆக மொத்தம் சேர்த்து சுமார் 2190 தெருமின் விளக்குகள் உள்ளன.<br>மேற்காணும் தெருமின் விளக்குகள் மழை காற்று மற்றும் கடல் காற்றின் ஈரப்பதம் ஆகியவற்றினால் அடிக்கடி பழுதடைகின்றன. குறிப்பாக இராமேஸ்வரம் கடல் நீரின் உப்புத் தன்மையானது ஆசியாவிலேயே உப்புதன்மை அதிகம் உள்ள இரண்டாவது கடல் பகுதி ஆகும். இதனால் இராமேஸ்வரம் பகுதியில் வீசும் காற்றில் உப்புத் தன்மை அதிகமாக இருக்கும், இதனால் அடிக்கடி தெருமின் விளக்கு சாதனங்கள் மற்றும் தெருமின் விளக்கு உதிரிபாகங்களான பல்புகள், சோக்குகள், இக்னேட்டர்கள் மற்றும் ஹோல்டர்கள் அடிக்கடி சேதமடைந்து தெருமின் விளக்குகள் அடிக்கடி பழுதாகிறது இதனால் நகரில் தெருமின்விளக்குகளைபராமரித்திடமிகவும் சிரமமான சூழ்நிலை உள்ளது.<br>மேலும் தெருவிளக்கு பராமரிப்பதற்கு தேவையான தெருமின் விளக்கு சாதனங்கள் மற்றும் உதிரிபாகங்கள் மிக குறைவானஅளவிலேயே இருப்பு உள்ளது. மேலும், சில உதிரிபாகங்கள் அறவே இல்லாத நிலையும் உள்ளது. இதனால் தெரு மின்விளக்குகள் பராமரிப்பில் தொய்வு ஏற்படும் சூழ்நிலையில் | தீர்மானம் எண். 357 அனுமதிக்கப்பட்டது. |

உள்ளது. இதனால் பாதுகாப்பு சூழ்நிலையில் சிரமமாக உள்ளஅபாயம் உள்ளது. எனவே, பொதுமக்களின் பாதுகாப்பு நலன் கருதியும், தெருமின் விளக்குகளை முறையாகவும், சரிவர பராமத்திடவும் கீழ்காணும் தெருமின் விளக்கு உதிரிபாகங்கள் ஒருவருடத்திற்கு முதற்கட்டமாக தேவைப்படுகின்றது, அதன் விபரம் பின்வருமாறு:-

1. 36 W CFL பல்புகள் – 100 எண்ணம்
2. 36W CFL எலக்ட்ரானிக் சோக்குகள் - 700 எண்ணம்
3. 250W சோடியம் ஆவிவிளக்குகள் - 30எண்ணம்
4. 250W சோடியம் ஆவிவிளக்குசோக்குகள் - 20 எண்ணம்
5. 400 W மெட்டல் ஹெலாடேவிளக்குகள் - 30 எண்ணம்
6. 400 W மெட்டல் ஹெலாடேவிளக்குசோக்குகள் - 20 எண்ணம்
7. (250 W & 400 W) இக்னேட்டர் – 50 எண்ணம்
8. (250 W & 400 W) ஹோல்டர் – 25எண்ணம்
9. 1/18 ப்ளக்ஸ் காப்பர் வயர் காயில் – 5 எண்ணம்

மேற்காணும், தெருமின் விளக்கு உதிரிபாகங்கள் கொள்முதல் செய்திட ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.3,60,000/–க்கு மன்றத்தின் பார்வைக்கும், நிர்வாகஅனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1. மேற்காணும் பணியானது தெருமின் விளக்கு பராமரிப்பு தொடர்பான பணியாக இருப்பதாலும் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்புநலன் கருதியும் அனுமதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| | 2. தற்போது கோவிட் 19 தொற்றுகாரணமாக இரவில் தெருமின் விளக்குகள் தடையின்றி ஒளிர்ந்திட அவசியம் என்பதால், அவசியம் கருதியும், காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டுமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். | |

ஆணையாளர்/தனிஅலுவலர்,
இராமேஸ்வரம் நகராட்சி.